தினமலர்
கோயம்புத்தூர் | வியாழன் | 15.10.2015

# 'கோவை டூ சென்னை' புறப்பட்டது ஜி.டி.நாயுடு உருவாக்கிய பெட்ரோல் கார்




கோவை ஜி.டி.,நாயுடு நிறுவனத்தின் சார்பில், உருவாக்கிய பென்ஸ் மாடல் கார், நேற்று கோவையிலிருந்து சென்னை நோக்கி புறப்பட்டது. மகாராஷ்டிர மாநிலம் இந்து சமஸ்தான அரச குடும்பத்தை சேர்ந்த, மன்வேந்திர சிங் பயணத்தை துவக்கி வைத்தார்.

**கோவை, அக். 15–**

கோவை ஜி.டி.மியூசியத்தில் பாதுகாக்கப்பட்டிருந்த, மூன்று சக்கர பெட்ரோல் கார், நேற்று சாலை மார்க்கமாக சென்னைக்கு புறப்படடது.

1886ல் ஜெர்மனியை சேர்ந்த பொறியாளர் கார்ல் பென்ஸ், மோட்டார் வேகன் காரை உருவாக்கினார். பெட்ரோலில் இயங்கும் வகையில் முதன் முதலாக உருவாக்கப்பட்ட, மூன்று சக்கர மோட்டார் வாகனத்துக்கு, அவர் காப்புரிமை பெற்றார். பென்ஸ் மனைவி பெர்தா, காரை சாலை பயன்பாட்டுக்கு கொண்டு வந்தார்.

இதே மாடலில் கோவை ஜி.டி. நாயுடு, 86 ஆண்டுகளுக்கு முன் உருவாக்கிய மூன்று சக்கர மோட்டார் வாகனம், ஜி.டி., மியூசியத்தில் மக்கள் பார்வைக்கு வைக்கப்படடிருந்தது. இந்த காரில், கோவையிலிருந்து சென்னைக்கு சாகசப்பயணம் மேற்கொள்ள, ஜி.டி.நாயுடு அறக்கடடளையினர் திட்டமிட்டிருந்தனர்.

அதன்படி, நேற்று மாலை ஜி.டி.மியூசியம் வளாகத்தில் இருந்து சென்னைக்கு பயணம் துவங்கியது. மகாராஷ்டிர மாநிலம் இந்து சமஸ்தான அரச குடும்பத்தை சேர்ந்த, மன்வேந்திர சிங் பயணத்தை துவக்கி வைத்தார். இந்த பயணம்தான் மோட்டார் வேகன் காரின் நெடுந்துார பயணமாக இருக்கும் என்கின்றனர் ஜி.டி. அறக்கட்டளை நிர்வாகிகள்.

இன்று இரவு, 10:45 மணிக்கு 'வேகன் கார்', சென்னையை சென்றடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த சாகச பயணத்தின் நிறைவு விழா, நாளை மாலை, 5:00 மணிக்கு சென்னை தாஜ் ஓட்டலில் நடக்கிறது.

ஜி.டி.நாயுடு மகன் கோபால் கூறுகையில், ''இந்தியா உலக நாடுகளுடன் தொழில்நுட்ப ரீதியாக போட்டியிட முடியும் என்பதை உணர்த்தும் வகையில், இந்த சாகசப்பயணம் இருக்கும்,'' என்றார்.

Hindu 15.10.2015

# Benz Motorwagen replica's historic journey begins




*Manvendra Singh Barwani (seated right), Maharana of Barwani, Indore, sets off for the first leg of the 500-km journey from Coimbatore to Chennai on the 1886 Benz Motorwagen replica from the Gedee Car Museum in Coimbatore on Wednesday.*

- PHOTO: M. PERIASAMY

Rayan Rozario

**COIMBATORE:** A replica of the 19th century Benz Motorwagen set off on its historic journey from Coimbatore to Chennai from the Gedee Car Museum (GCM) here on Wednesday.

Dubbed the Heritage Motor Drive by GCM, the promoters of the event, the vehicle pulled in the crowd an hour before the scheduled flag-off.

They had come to see what the first horseless carriage in the world looked like. And some of the motor sport enthusiasts in the crowd helped them out with its history. And of course, there were selfies along with the vehicle. After tackling the crowd and the media, the 1886 Benz Motorwagen replica finally rolled out on its 500 km non-stop trip. And, the crowd roared in delight.

Manvendra Singh Barwani, the Maharana of Barwani, Indore, had the privilege of driving the first few kilometres. He

**A six-member team will take turns in driving the vehicle to Chennai**

looked thrilled to be part of the event.

The first 20km turned out to be a bit tough as crowds worked themselves up into a frenzy seeing the 'old fella' pass by.

But G.D. Gopal, GCM's Managing Trustee, sounded confident. "We are fully prepared. We don't expect any practical difficulties. Grease for the gears may be required. Otherwise, I expect it to be a safe journey all the way."

A six-member team, all experts who had worked on the replica, will take turns in driving the vehicle to Chennai.

They will change hands at the wheel every 30km and the vehicle will be topped up with fuel, water coolant and lube oil.

They are excited about this historic drive.

"Even modern cars sometimes find it hard to travel this long. But this vehicle is lightweight with a very simple engine. And, it gives a mileage of 17km to a litre," said Mr. Gopal.

With modern technology involved, this vehicle is sure to be far superior to the older version. It has proved its strength as well by passing similar tests on a couple of occasions.

"It took me close to 13 years to get a prototype. And, once I got it, I brought in 21 students from my institute and asked them whether they could make this car, which had 430 parts. They took seven months to complete it," said Mr. Gopal.

"The Germans were awestruck; the Britishers could not believe their eyes. So we set up a production line to make more such replicas. I am happy that today, one such replica has set on a journey that to my knowledge nobody has undertaken in the world."

கோவையில் இருந்து சென்னைக்கு

# உலகின் முதல் கார் வடிவமைப்பில் தயாரிக்கப்பட்ட வாகனத்தில் சாதனை பயணம்




உலகின் முதல் மோட்டார் வாகனம் போன்று தயாரிக்கப்பட்ட புதிய வாகனம் கோவையில் இருந்து நேற்று சென்னைக்கு புறப்பட்டது. இந்த வாகனத்தை மத்திய பிரதேச மாநில இந்தூர் ஜமீன்தார் மன்வேந்திர பர்வானி ஓட்டிச்சென்ற போது எடுத்த படம்.

கோவை,அக்.15–

ஜெர்மனி நாட்டின் கார்ல் பென்ஸ் என்ற என்ஜினீயர் தயாரித்த உலகின் முதல் மோட்டார் வாகனத்தை போன்று கோவை ஜி.டி. நாயுடு அறக்கட்டளையினர் தயாரித்த வாகனம் கோவையில் இருந்து சென்னைக்கு நேற்று சாதனை பயணமாக புறப்பட்டது.

## புதிய வாகனம் தயாரிப்பு

இந்தியாவின் பிரபல விஞ்ஞானியான ஜி.டி.நாயுடு கோவையை சேர்ந்தவர். அவருடைய மகன் ஜி.டி.கோபால், தனது தந்தை பெயரில் பழங்கால கார் அருங்காட்சியகத்தை கோவையில் அமைத்து உள்ளார். அதில் 100 ஆண்டுகளுக்கும் மேலான பழமையான வெளிநாட்டு கார்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு உள்ளன.

இந்த அருங்காட்சியகத்தில் உலகின் முதல் பென்ஸ் மோட்டார் வாகனம் இடம் பெற்றுள்ளது. 1886–ம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட அந்த காரை போன்று ஜி.டி.நாயுடு அறக்கட்டளையினர் புதிய வாகனம் ஒன்றை தயாரித்துள்ளனர்.

இந்த வாகனத்தின் 500 கிலோ மீட்டர தூர சாதனை பயணத்தின் தொடக்க விழா கோவையில் உள்ள ஜி.டி.நாயுடு அருங்காட்சியகத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

இந்த சாதனை பயணத்தை மத்திய பிரதேச மாநிலம் இந்தூர் ஜமீன்தார் மன்வேந்திர சிங் கொடி அசைத்து தொடங்கி வைத்தார். பின்னர் அவர் கோவையில் இருந்து 10 கிலோ மீட்டர் தூரம் அந்த வாகனத்தை ஓட்டிச் சென்றார். இந்த நிகழ்ச்சியில் கோவையைச் சேர்ந்த கார் பிரியர்கள், முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர். கோவை அவினாசி சாலையில் வித்தியாசமான வாகனம் ஒன்று செல்வதை பார்த்து வாகன ஓட்டிகள் ஆச்சரியத்துடன் பார்த்தனர்.

## ஜி.டி.நாயுடு மகன் பேட்டி

இது குறித்து ஜி.டி.நாயுடுவின் மகனும், அறக்கட்டளை நிர்வாகியுமான ஜி.டி.கோபால் நிருபர்களிடம் கூறியதாவது:–

1886–ம் ஆண்டு குதிரை இல்லாமல் உலகின் முதல் முதலாக எந்திரத்தின் மூலம் இயங்கும் வாகனத்தை ஜெர்மனி நாட்டின் கார்ல் பென்ஸ் என்ற என்ஜினீயர் கண்டுபிடித்தார். அது இரண்டு இருக்கை கொண்ட கார் ஆகும். இது 3 சக்கரங்களை கொண்டது. அதுவரை அந்த வாகனம் சாலையில் வெகுதூரம் இயக்கப்படவில்லை.

இந்த நிலையில் கார்ல் பென்சின் மனைவி பெர்தா பென்ஸ் கணவருக்கு தெரியாமல் அந்த வாகனத்தில் தங்கள் மகன்கள் ஈகன், ரிச்சர்ட் ஆகியோரை ஏற்றிக்கொண்டு ஜெர்மனி நாட்டின் மேன்ஹேய்ம் என்ற ஊரில் இருந்து போர்செம் என்ற நகரம் வரை 194 கிலோ மீட்டர் தூரம் ஓட்டிச் சென்றார்.

இதன்மூலம் உலகம் முழுவதும் மோட்டார் வாகன வசதியை அறிமுகப்படுத்திய முதல் பெண் என்ற பெருமைக்கு உரியவரானார். பிற்காலத்தில் பென்ஸ் நிறுவனம் நீண்ட தூரம் செல்லக்கூடிய வாகனங்களை தயாரிக்க முடியும் என்று அந்த பயணத்தின் மூலம் அவர் நிரூபித்தார்.

அந்த காலத்தில் அவ்வளவு தூரம் வாகனம் சென்றது பெரிய சாதனையாக கருதப்பட்டது.

## 500 கிலோ மீட்டர் தூரம்

எனவே கார்ல் பென்ஸ் தயாரித்த கார் வடிவமைப்பில் மற்றொரு வாகனத்தை நாங்களும் தயாரித்துள்ளோம். அந்த வாகனம் 500 கிலோ மீட்டர் தூரம் ஓடக்கூடியது என்பதை நிரூபிப்பதற்காக இந்த நீண்ட தூர வாகன சாதனை பயணம் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

அதன்படி கோவையில் இருந்து புறப்பட்ட அந்த வாகனம் பெருந்துறை, குமாரபாளையம், சேலம், ஆத்தூர், சின்னசேலம், கள்ளக்குறிச்சி, உளுந்தூர்பேட்டை, விழுப்புரம், திண்டிவனம், செங்கல்பட்டு, தாம்பரம் வழியாக 500 கிலோ மீட்டர் தூரத்தை கடந்து சென்னையை நாளை (இன்று) இரவு அடையும். 16–ந் தேதி மதியம் சென்னை தாஜ் கோரமண்டல் ஓட்டலில் அந்த கார், பார்வையாளர்களுக்காக நிறுத்தப்படும்.

## 6 டிரைவர்கள்

இந்த வாகனம் பென்சீன் என்ற எரிபொருளில் இயங்கக்கூடியது. இந்த வாகனத்தை இயக்குவதற்காக 6 டிரைவர்கள் உடன் செல்கிறார்கள். ஒவ்வொரு 30 கிலோ மீட்டர் தூரத்துக்கும் ஒரு டிரைவர் என்று மாறி மாறி இந்த வாகனத்தை இயக்குவார்கள். இதற்கு தேவையான பென்சீன் எரிபொருள் மற்றும் என்ஜின் சூடேறாமல் இருப்பதற்காக தண்ணீர் ஆகியவை மற்றொரு வேனில் உடன் எடுத்துச் செல்லப்படுகிறது. இது மணிக்கு 20 கிலோ மீட்டர் வேகத்தில் செல்லக்கூடியது. 1886–ம் ஆண்டு வடிவமைக்கப்பட்ட கார் அப்போது 194 கிலோ மீட்டர் தூரம் சென்றது பெரிய சாதனையாக கருதப்பட்டது. ஆனால் அதே போன்று நாங்கள் வடிவமைத்த வாகனம் நீண்ட தூரம் ஓடக்கூடியது என்பதை நிரூபிக்கும் என்று எதிர்பார்க்கிறோம். இதற்கான முன்னோட்டம் கடந்த ஜூன் மாதம் நடத்தப்பட்டது. அது வெற்றி பெற்றது.

இவ்வாறு அவர் கூறினார்.

# Benz sets off on historic CBE-Chennai journey

Deccan Chronical 15.10.2015

**DC CORRESPONDENT**
COIMBATORE, OCT. 14

In a record of sorts, a replica of the 19th century Benz Motorwagen began its 500 km run from Coimbatore to Chennai on Wednesday evening.

When the 1886 Benz Motorwagen rides its way into glory by reaching Chennai on Friday night, it might be the longest distance covered by a replica of a horseless carriage in the world.

This two-seater vehicle, designed by Carl Benz, was flagged off by Manvendra Singh Barwani, the Maharana of Barwani from the Gedee Car Museum. He also drove the car upto Neelambur toll plaza.

This is the longest drive, almost after Bertha Benz, wife of Carl, took out a long journey of 194 km from Mannheim to Pforzheim. "This car is a marvel that can run even for longer journeys," said G D Gopal, chairman of G D Naidu Charities.

Prior to this historical event, a trial run from Coimbatore to Salem for a distance of upto 165 km in June this year turned out to be successful. "It gave us confidence that even longer distance can be tried out," he said.

The car, when is likely to run nonstop, is expected to reach Chennai on Friday night at around 10.30 pm.




The replica of the 19 century Benz Motorwagen began its 500 km run from Coimbatore to Chennai on Wednesday evening. —DC

Times of India 15.10.2015

# On the road from Coimbatore to Chennai to revisit Benz history

TIMES NEWS NETWORK

**Coimbatore:** The 1886 Benz Motor-wagon, the world's first horseless carriage, was designed to drive for a maximum of 15 minutes. But, on Wednesday, the Gedee Group attempted to drive a replica of the car for 500km, from Coimbatore to Chennai, the longest drive by the model in a single stretch.

On Wednesday evening, an avid car collector and automobile enthusiast, Rana of Barwani, Indore, Manvendra Singh, flagged off the ride from the Gedee Car Museum at 4.30pm. He drove the car till the Neelambur Toll Plaza, about 30km from the museum. "It is an honour to be part of this historic ride. The car is an example of excellent engineering and to be able to recreate it with the same precision and quality is a hallmark in itself," said Singh before beginning the ride. Singh also owns a 1886 Benz Motorwagon designed by the Gedee Group.

P Sreedharan




A replica of the 1886 Benz Motorwagen will be driven 500km to record the longest drive by the model in a single stretch

The car was designed by Karl Benz and was patented in 1886. Until now, the record for the longest drive in the 1886 Benz Motorwagen was held by Karl's wife Bertha Benz. She drove from Mannheim to Pforzheim and back travelling 194km along with her sons, Eugen and Richard. "With this ride she proved the feasibility of the car as a means of travel," said G D Gopal, chairman of G D Naidu Charities.

The Gedee Group started designing replicas of the car in 2012, and the first car was ready in 2013. Following a series of trial runs, G D Gopal decided to attempt a design for longer distances. This past June 13, the group attempted to drive the car to Salem covering 165km in nine hours. "Having successfully completed this ride, we gained confidence about covering longer distances. With this success, we decided to drive it to Chennai," G D Gopal said.

The car will be driven for 30 hours to reach Chennai on Thursday at 10.30pm. The G D Group has organized a convoy to travel along with the car until Chennai. A total of 50l fuel (Benzene) and close to 100l (water) for coolant is being carried by the convoy. "Six drivers would work in rotation every 30km. These drivers are experienced and were part of the ride to Salem," said assistant general manager, operations, UMS Technologies Limited, N Ramaraj who is also accompanying the team.

The car will be received by the commissioner of tourism and managing director, Tamil Nadu Tourism Development Corporation, Har Sahay Meena and consul general of Germany, Chennai, Achim Fabig on Friday, in Chennai.